முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்

எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சோபகிருது வருடம் தை மாதம் 21 திகதி முதல்

சோபகிருது வருடம் தை மாதம் 28 திகதி வரை

(04.02.2024 ஞாயிறு முதல் 11.02.2024 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. தயவு தருமநெறி பரவிட
   தவசியாக வந்து அருளுகின்ற
   நேயமிக்க ஆறுமுக அரங்கனே
   நிலவுலகம் உன் அவதாரம் அறியவேண்டி
2. அறியவேண்டி உமை வாழ்த்தியே
   அறிவிப்பேன் இந்தியா தமிழகத்தில்
   வரமென சோபகிருது கலைதிங்கள்
   வல்லமைபட மூவேழு திகதிமேல் எழுநான்கு திகதிவரை
3. வரைநடக்கும் வார நிகழ்வாக
   வருங்கால பலன்குறித்த ஆசி
   உரைத்திடுவேன் அகத்திய மகரிஷியும்
   உலகமாற்றம் நிகழ்த்தும் ஞானி
4. ஞானி அரங்கன் தமிழகம் தன்னில்
   நல்அவதாரம் எடுத்து சேவை
   கனிவேலவன் பேரிலே நடத்த
   கட்டாயம் தமிழகத்தில் இருந்துதான்
5. இருந்துதான் உலக மாற்றம்
   இந்தியா முழுக்கப் பரவியே
   அருந்தவ சக்திகள் பலவும்கூடியே
   அற்புதம் சடுதி நடக்க இருக்க
6. இருக்கவே இந்திய தமிழகஆளுமைகள்
   இன்னும் பகட்டான வாக்குறுதியை

வருத்தம் கொள்ளா தந்துதொடரும்
வாய்மையிலா செயல்முறைகளை விட்டு

7. விட்டுவிட்டு தருமஞான வழியை
விரைந்து மக்கள் சேவையாக
கட்டம் தராாத ஆளுமையாக
கருணைபட நடந்து வந்தால்தான்

8. வந்தால்தான் ஆளுமைகளும்
வரலாறு காணத்தொடர நேரும்
சிந்தை மாற்றம் காணாபதுக்கல்
சுருட்டல் ஊழல் பாதகங்களாக

9. ஆகவே நீதிநெறி காத்திடா
ஆளுமைகள் தொடர்ந்தால்
மகான்கள் வெளிப்பட விழிப்புணர்வு
மக்களிடை ஞானசக்தியாகப் பரவிட

10. பரவிடவே அஞ்ஞானத் தலைமை
பறிக்கும்படி மக்களிடை ஆதரவிழந்து
வருங்காலம் அறமே வடிவான
வடிவேலன் ஆசிபெற்றோருக்கு வாய்ப்பாக மாறும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சோபகிருது வருடம் தை மாதம் 21ம் நாள் 04.02.2024 ஞாயிற்றுக்கிழமை முதல் தை மாதம் 28ம் நாள் 11.02.2024 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் :

உலகினில் மக்கள்படும் துன்பங்களில் இருந்து மக்களை காத்திட தயவு நெறியே உயர்ந்தது என்றும் தருமமே உலகை காக்கும் என்றும் மக்களுக்கு உணர்த்தி அத்தகு சிறப்பு மிக்க தயவு தரும நெறி பரவிடவே மகா தவசியாக முருகப்பெருமானின் சக்தி வடிவமாக அவதரித்து மக்களுக்கு அருள் செய்து மக்களை தயவு தரும நெறியில் செலுத்தி காக்கின்ற கருணையே வடிவான ஆறுமுக அரங்க மகா தேசிகனே உமது அவதாரத்தினை உலக மக்கள்

அறிந்திட வேண்டியே உம்மை வாழ்த்தியே அகத்திய மகரிஷி யானுமே இந்தியா தமிழகத்திலே சோபகிருது வருடம் தை மாதம் 21ம் நாள் 04.02.2024 ஞாயிற்றுக்கிழமை முதல் தை மாதம் 28ம் நாள் 11.02.2024 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

உலக மாற்றம் நடத்திட வேண்டியே முருகப்பெருமானின் சக்தி வடிவமாக ஆறுமுக அரங்க மகா தேசிகனாரும் தமிழகத்திலே அவதரித்து உலக மக்களுக்கு அளவிலாத சேவைகளை ஞானத்தலைவன் முருகப்பெருமானை முன்னிறுத்தி செய்து வருகின்றார்.

ஆகையினாலே உறுதியாக தமிழகத்தினில் இருந்துதான் உலக மாற்றம் துவங்கும். தமிழகத்தினில் இருந்து உலக மாற்ற நிகழ்வுகள் மெல்ல இந்திய தேசமெங்கும் பரவி தேசமெங்கும் உள்ள அரும்தவ சக்திகள் எல்லாம் பெருகி பெருகி தேசம் எங்கும் அற்புதங்கள் பரவி மாற்றங்கள் விரைந்து நடக்க இருக்குதப்பா.

ஆதலினாலே இந்தியா, தமிழகத்தை ஆட்சி புரியுவோர் இனி மேலாகினும் அவர்கள் செயல்படுத்த இயலாத பகட்டான வாக்குறுதிகளை தராமல் மக்கள் வருத்தம் கொள்ளும்படி போலியான செயல்முறைகளை கைவிட்டு விட்டு தருமஞான வழியினை உளமாற ஏற்றுக் கொண்டு மக்களுக்கு சேவை செய்யும் தன்னலம் இல்லாத நல்லோராக மக்களுக்கு துன்பம் விளைவிக்காத ஆளுமையாக கருணையுடன் நடந்து கொள்ள வேண்டுமப்பா.

கருணையுடன் ஆளுமைகள் நடந்து வந்தால்தான் தொடர்ந்து அவர்கள் மக்களின் மதிப்பை பெற்று ஆளுமையில் தொடர்ந்திட நேருமப்பா. அவ்வாறு இல்லாமல் மனம் மாறாது தொடர்ந்து ஒரு சிலர் பதுக்கல், சுருட்டல் ஊழல் புரிதல் என மக்களுக்கு ஆகாத பாதகங்களை செய்து வந்தால் நீதியை காக்காது தொடர்ந்து நடந்தால் அவர்கள் மக்களால் புறக்கணிக்கப்படுவார்கள்.

நாட்டினில் மக்களிடம் விழிப்புணர்வு அதிகமாகி மகான்கள் வெளிப்பட்டு தேசம் எல்லாம் ஞானசக்தி பரவி மோசமான தலைமைகள் மக்களிடையே

ஆதரவு இழந்து போவர். தருமம் மிக்க ஞானம் மிக்க அறமே வடிவான ஞானத்தலைவன் முருகப்பெருமானின் ஆசி பெற்ற மக்களுக்கு வாய்ப்புகள் கிடைத்து அவர்கள் மக்களை ஆளும் சூழல் உருவாகுமப்பா எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–